# नटराज दसकम्

# ஸ்ரீ நடராஜ தசகம்

## SRI NATARAJA DASAKAM

தமிழ் கவிதை வடிவில்...

பி. ஸ்ரீதேவிபிரசாத்
psdprasad.music@gmail.com

ஸெப்டம்பர் - 2017

## ஸ்ரீ கணேசாய நம:

## ஓம் நமசிவாய:

# ஸ்ரீ நடராஜ தசகம்

சேங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரால் நடராஜ பெருமான் மீது சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட 10 ஸ்லோகங்கள் "நடராஜ தசகம்" என்பதாகும்.

சக்தி மிகுந்த இந்த ஸ்லோகத்தை பக்தியுடன் சொல்லி வந்தால், சகல நன்மைகளும் கூடி வரும்.

ஓம் நமசிவாய ! ஸ்ரீ தேவியே சரணம் ! வணக்கங்களுடன்....

பி.ஸ்ரீதேவிபிரசாத்



1)

கனகஸபாகத காஞ்சனவிக்ரஹ
காமவிநிக்ரஹ காந்ததனோ
கலிகலிதாகில பாபமலாபஹ
க்ருத்திஸமாவ்ருததேஹ விபோ
குவலயஸன்னிப ரத்னவிநிர்மித
திவ்யகிரீட ஸுபாஷ்டதனோ
ஜய ஜய ஹே நடராஜபதே
ஸிவபாக்யஸம்ருத்திமுபார்ஜய மே!!

கனகசபா உறை, காந்த பொன் தேகனே !
காமனை வென்றவா ! சாம்பசிவா !
கலித்துயர் பாவங்கள் தீர்த்தருள் செய்பவா !
கரித்தோல் பூண்ட பரமசிவா !
நீலோத் பலமலர் நிறத்தினில் ரத்தினம்
பொதிந்ததோர் மகுடம் சூடியவா !
சகல சௌபாக்யமும் சாந்தமும் அருளிடும்
நடராஜா ! நமஸ்காரம் !

2)
கரகலிதாமல ஸூலபயங்கர
காலநிராஸக பாதவிபோ
பதகமலாகத பக்தஜனாவன
பத்தஸுகங்கண தேவ விபோ!
ஸிவநிலயாகத பூதிவிபூஷித
தீக்ஷித பூஜித பூஜ்யதனோ
ஜய ஜய ஹே நடராஜபதே
ஸிவபாக்யஸம்ருத்திமுபார்ஜய மே!!

கரத்தினில் சூலமும் ஏந்திடும் சூலா !
காலனை வென்றவா ! சாம்பசிவா !
பதமலர் போற்றிடும் அடியவர்க்கு (யா)வையும்
பரிவுடன் தருகிற பரமசிவா !
சிவனடியார்கள் வணங்கிடும் ஈசா !
சாம்பலைப் பூசிடும் சர்வேசா !
சகல சௌபாக்யமும் சாந்தமும் அருளிடும்
நடராஜா ! நமஸ்காரம் !

3)

ஹர ஹர ஸங்கர பக்தஹ்ருதம்பர
வாஸசிதம்பர நாத விபோ
துரிதநிரந்தர துஷ்டபயங்கர
தர்ஸன ஸங்கர திவ்யதனோ!
தஸஸதகந்தர ஸேஷஹ்ருதந்தர
ஸங்கர ரக்ஷித பார்த்தகுரோ
ஜய ஜய ஹே நடராஜபதே
ஸிவபாக்யஸம்ருத்திமுபார்ஜய மே!!

ஹரஹர சங்கர உரைப்பவர் மனதினில்
உறைந்தருள் செய்திடும் சிதம்பரனே !
பிறருக்கு என்றும் தொல்லைகள் செய்யும்
தீயவர் பயம்கொள்ளும் ஹரசிவனே !
ஆயிரம் தலையினன் இதயத்தில் வாழ்ந்திடும்
அர்ஜுனன் குருவே குருசிவனே !
சகல சௌபாக்யமும் சாந்தமும் அருளிடும்
நடராஜா ! நமஸ்காரம் !

4)

ஸிவஸிவ ஸங்கர ஸாம்பபுரந்தர
பூஜித ஸுந்தர மந்த்ரநிதே
முரஹரஸன்னிதி மங்களதர்ஸன
மந்த்ர ரஹஸ்ய சிதாத்மதனோ!
புரஹரஸம்ஹர பாபமபாகுரு
பீதிமராதிக்ருதாமகிலாம்
ஜய ஜய ஹே நடராஜபதே
ஸிவபாக்ய ஸம்ருத்திமுபார்ஜய மே!!

மங்கலம் தந்திடும் அம்பிகை உடனுறை
சங்கரன் சிவனே ! எழில் உருவே !
இந்திரன் தொழுதிடும் மந்திர வடிவே !
ரகசிய ரூபனே ! தவ குருவே !
முரஹரன் மாலவன் அருள்தரும் சன்னதி
அருகினில் அருளிடும் ஹரசிவனே !
திரிபுரம் எரித்தவா ! பாவங்கள் எரித்தெமை
எதிரிகள் விலக்கி காத்திடவா !
சகல சௌபாக்யமும் சாந்தமும் அருளிடும்
நடராஜா ! நமஸ்காரம் !

5)

புஜக விபூஷண பூதிவிலேபன
பாலவிலோசன லோகதனோ
வ்ருஷபஸுவாஹன காங்கபயோதர
ஸுந்தரநர்த்தன ஸோமதனோ!
ஸுததனதாயக ஸௌக்யவிதாயக
ஸாதுதயாகர ஸத்வதனோ
ஜய ஜய ஹே நடராஜபதே
ஸிவபாக்யஸம்ருத்திமுபார்ஜய மே!!

நீறினைப் பூசிடும் நாகா பரணனே !
நந்தி வாகனா ! உமை பதியே !
பேரெழில் நாட்டியம் ஆடிடும் பாதா !
உலகையே உடலாய் கொண்ட சிவா !
புத்திர பாக்யமும், சகல சௌக்யமும்
தந்திடும் தயாளா ! குண சீலா !
சகல சௌபாக்யமும் சாந்தமும் அருளிடும்
நடராஜா ! நமஸ்காரம் !

6)

ஸகலஹ்ருதந்தர சந்த்ரகலாதர
மந்த்ரபராக்ருத பூததே
சரணஸமர்ச்சன திவ்யக்ருஹாகத
தேவவரார்பித பாக்யததே!
விதிஹரிநாரத யக்ஷஸுராஸுர
பூதக்ருதஸ்துதி துஷ்டமதே
ஜய ஜய ஹே நடராஜபதே
ஸிவபாக்யஸம்ருத்திமுபார்ஜய மே!!

இளம்பிறை சூடிய இறைவனே ! தேவா !
அனைத்துயிர் உறையும் ஜக தீசா !
நலம்தரும் மந்திரத் திரு வடி வானோய்
பூத கணம்சூழ் பர மேசா !
ப்ரம்மனும், விஷ்ணுவும் நார தாதியரும்
போற்றிடும் திருவே சிவ நேசா !
சகல சௌபாக்யமும் சாந்தமும் அருளிடும்
நடராஜா ! நமஸ்காரம் !

7)

கிரிதனயார்பித சந்தன சம்பக
குங்கும பங்கஜ கந்ததனோ
திமி திமி திந்திமி வாதன நூபுர
பாததலோதித ந்ருத்தகுரோ!
ரவிகிரணாஸ்தமயாகத தைவத
த்ருஷ்டஸுநர்த்தன தக்ஷதனோ
ஜய ஜய ஹே நடராஜபதே
ஸிவபாக்யஸம்ருதத்திமுபார்ஜய மே!!

மலைமகள் நல்கிய சந்தனம், சம்பகம்
குங்குமம் மணம்நிறை மேனி யனே !
திமி திமி திந்திமி எனுமொலி எழுப்பிடும்
பதம்தனில் நடனம் தந்த வனே !
தேவர்கள் மனம்மகிழ் ஆனந்த தாண்டவம்
ஆடிய பதனே ! குரு சிவனே !
சகல சௌபாக்யமும் சாந்தமும் அருளிடும்
நடராஜா ! நமஸ்காரம் !

8)

ஹிமகிரிஜாகர ஸங்க்ரஹணோதித
மோதஸுபூர்ண ஸுவர்ணதனோ
குஹகணநாயக கீதகுணார்ணவ
கோபுரஸூசித விஸ்வதனோ!
குணகணபூஷண கோபதிலோசன
கோபகுலாதிப மித்ரமணே
ஜய ஜய ஹே நடராஜபதே
ஸிவபாக்யஸம்ருத்திமுபார்ஜய மே!!

இமவான் புத்திரி பார்வதி பதியே !
நற்குணக் கடலே! அருள்நிதியே!
ஐங்கரன், அறுமுகன் போற்றிடும் சிவனே!
அழகிய பொன்நிற மேனியனே!
சூரியன் கண்ணெனக் கொண்ட எம்அரனே!
கோகுலக் கண்ணனின் சிநேகிதனே!
குவளயம் போற்றிடும் குரு சிவ பரனே !
கோபுர தரிசனம் தருபவனே !
சகல சௌபாக்யமும் சாந்தமும் அருளிடும்
நடராஜா ! நமஸ்காரம் !

11)

சிவதமனந்த பதான்வித
ராமஸுதீக்ஷித ஸத்கவி பத்யமிதம்
நடனபதேரதி துஷ்டிகரம்
பஹுபாக்யதமீப்ஸித ஸித்திகரம்!
படதி ஸ்ருணோதி ச பக்தியுதோ
யதி பாக்ய ஸம்ருத்திமதோலபதே
ஜய ஜய ஹே நடராஜபதே
ஸிவபாக்யஸம்ருத்திமுபார்ஜய மே!!

ராம தீட்சிதர் அருளிய பாடலை
பக்தியாய் அனுதினம் படிப்பதனால்..
சேமங்கள் யாவையும் சேர்ந்திடும் வாழ்வில்
விரும்பிடும் யாவும் கைகூடும் !
சகல சௌபாக்யமும் சாந்தமும் அருளிடும்
நடராஜா ! நமஸ்காரம் !